REGD No. M. 4642

திராவிடநாடு

இலங்கை 15 சதம் | விலை அணா 2

மலர் 9 | 1—4—51 | இதழ் 41

★ சிலம்பு ஒலித்தது!

[அண்ணல்]

"தாயைக் கண்டேன்!
தாயைக் கண்டேன்!
'நலங்கேழ் முறுவல்
நகைமுகம் காட்டிச்
சிலம்புள கொள்ளும்'
என செப்பிய
பத்தினித் தாயைக்
கண்டேன்! கண்டேன்!!
'தண்ணீர் தெளித்துத்
தன் கையால் தடவிக்
குமரி வாழையின்
குருத்தகம் விரித்து ஈங்கு
அமுதம் உண்க, அடிகள்!'
என, அழைத்து
இல்லறம் நடாத்திய
என் தாயைக் கண்டேன்!"

கண்டேன்! கண்டேன்!! என்று, ஆனந்தப் பரவசமாகி, ஒருவர் கூத்தாடியதைக் கண்டேன், நான். மகிழ்ச்சி வெள்ளத்தில், சிந்தாமணியாம் சிலப்பதிகார வரிகளை, தன் வார்த்தைகளோடு கோர்த்து, 'கண்டேன்! கண்டேன்!!' எனக் களிநடம் புரிந்துகொண்டிருந்தார் அவர். கையிலேஒன்றிரண்டு நூற்கள், வெள்ளுடை, மூக்கிலே கண்ணாடி, 'நான் ஒருதமிழ்மகன் எனக்கூறும் உருவம். தயங்கினேன். எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கிறதே இவரை என எண்ணினேன். அவரோ, என்னைக் கவனித்தாரில்லை! 'கண்டேன்! கண்டேன்!' என்று, மெய் மறந்து பாடிக்கொண்டிருந்தார். பாட்டைக் கூர்ந்து கவனித்தபோது 'தமிழில் துறைபோய' தமிழ்மகன் என்று பட்டது. நானிருப்பதோ இலண்டன்மா நகரம் — அவரை நெருங்கி அறிமுகம் செய்துகொள்ளும் ஆசை எழும்பியது. அவரை நோக்கிச் சென்ற என்னைத் திடுக்குறச் செய்தது, நான் கண்ட காட்சி! என் சிந்தனை சிதறியது!! ஆமாம், சிலையொன்று பேசியது. கற்சிலை—அது பேசிற்று! சிலைக்குமுன், நாவாரப் பண் பாடி நின்றார், 'எனக்குத் தெரிந்தவர்.' கூர்ந்து கவனித்தேன்; சிலை பேசியது. அவரும் பேசினார்.

"யாரப்பா நீ? எந்த ஊர்?"

"தாயே, என்னைத் தெரியவில்லையா. தங்கள் தமிழ்ப் பூமியில் பிறந்தவன் நான்"

"தமிழ்ப் பூமி...?" சிலையின் கேள்வியில் சிறிது சந்தேகம் தட்டிற்று.

"ஐயோ! அதைக் கூடவா, கால வெள்ளம், மறக்கடித்து விட்டது. மாதாவே! கொஞ்சம் கேளுங்கள். பூவிரிச் சோலை, காவிரிக்கரை, எழில் பூம் புகார்......"

"தமிழ் மைந்தனா! மகிழ்ச்சிதம்பி, மகிழ்ச்சி! நானிருந்தபோது கண்ட தமிழ் மகனும் இப்போதுள்ள தமிழ் மகனும்......எவ்வளவு மாற்றங்கள் கால தூதன் சிருஷ்டிக்கும் விசித்திரங்களைப் பார்! ஆமாம், மதுரை மாநகர், பூம்புகார் எல்லாம்......"

"வளமாக உள்ளனவா என்று தானே கேட்கிறீர்கள், தாயே! மதுரை, மாட மாளிகை கூட கோபுரங்களோடு இருக்கிறது ஆனால், பூம் புகார்தான், கடலுக் கடியில!"

"கடலுக்கடியில்! நான் பிறந்து வாழ்ந்த புகார் கடலுக்கடியில்! தமிழ் நாட்டின் செல்வக் களஞ்சியமப்பா, புகார். அதையா கடல் கொண்டு விட்டது, வேதனையான செய்தி!"

"ஆம் தாயே—வேதனையான செய்தி தான், வெந்து போகும் மக்கள், நைந்து சாகும் உயிர்கள், வேதனைப்படும் உருவங்கள், விளையாட்டு நடத்தும் அரசாங்கம்......"

"என் செய்வது! காற் சிலம்பேந்திச் சென்ற என் கணவனைக்கள்வன் என்றான், பாண்டியன். படுகளத்தில், என் கணவனை, வெட்டி வீழ்த்தி விளையாட்டு நடத்திற்று அவனது அரசுத் திமிர்! அந்தச் செய்தியைக் கேட்டதும், என் ஆவி துடித்தது. பொங்கி எழுந்தேன், விழுந்தேன், செங்கண் சிவப்ப அழுதேன்! என் ஆத்திரம் கரைபுரண்டது. காற்சிலம்பேந்திக் காவலன் முன் சென்

றேன்! 'நல்திறம் படராக் கொற்கை வேந்தே, என் காற் பொற்சிலம்பு மணியுடை யரியே'' என்றேன்! விழித்தான், வேந்தன்! 'பொன் செய் கொல்லன் தன் சொற் கேட்ட யானே அரசன்? யானே கள்வன்!' என்று அலறினன்! வீழ்ந்தான். பிணமானன்! ஆனல், என்ன? அப்போதும் என் ஆவேசம் அடங்கவில்லை! திட்டினேன், என் ஆத்திரத் தீ மூண்டது மதுரையெங்கும். வெந்தனர் மக்கள், நைந்து மடிந்தன உயிர்கள், வேதனைக்குத்தான் ஆளாயினர் மனிதர்கள்......''

''அம்மா, நான் அதை நினைவூட்டவில்லை. வேதனையான செய்தி என்று தாங்கள் குறிப்பிட்டதும் என் நினைவு தமிழகத்துக்குத் தாவிற்று, ஏதேதோ கூறிவிட்டேன்...''

''நீ கூறியவை தற்போதைய தமிழகத்தைப்பற்றியா?''

''...........''

''அங்கேயா, உயிர்கள் வேகின்றன, சாகின்றன! என்னப்பா, வேடிக்கை! அங்கு 'அரசியல் பிழைத்தோர்' இன்னுமா இருக்கிறார்கள்! அரசு கொண்டு அவல விளையாட்டு ஆடும் ஆட்சியா அங்கு நீடிக்கிறது!''

சிலையின் கேள்விகளிலே, ஆத்திரம், பதைபதைப்பு, ஆவேசம், அத்தனையும் மின்னியது! நான் திடுக்கிட்டுப் போனேன். தமிழகத்தின் சீர் கெட்ட நிலை குறித்து, பேசிப் பேசிப் பழகியதால், வாய் தவறி, வந்த இடத்திலும் கூறிவிட்டாரே இந்த ஆசாமி. தாயின் கேள்விக்கு அவர் தரப்போகும் பதில் என்னவோ, எப்படியிருக்குமோ, என்று அவரையே கவனித்துக் கொண்டிருந்தேன். தலை குனிந்து நின்றார் சிறிதுநேரம். பிறகு, ஏதோ, ஞாபகம் வந்தவர்போல உரத்த குரலில் கூறினர்:

''தாயே! நாங்கள் சுயராஜ்யம் பெற்றுவிட்டோம். இப்போது சுதந்தர வாழ்வு நடத்துகிறோம். புது மலர்ச்சி பூத்துவிட்டது. தமிழ்! தமிழ்!! என்று, தோள் தட்டிப் பாடுகிறார்கள் நம்மனோர். காணமுடியாத கருத்துக்களைக் காணத் துடிக்கின்றனர் தமிழ் மக்கள். இழந்ததை மீண்டும் பெறவேண்டும் என்ற எக்கம் மைந்த புதுமைப் பெற்றே தீர்வோம், என்ற மன ஆவேசம்! தாயே அதன் காரணமாகத்தான் நான்கூட இங்கு வந்தேன். தாங்கள், எங்களை அடக்கியாண்ட ஆங்கிலேயரால் இங்கு கொண்டு வரப்பட்ட செய்தியை இப்போதுதான் அறிந்தோம். அது முதல், தேப்ஸ் நகரித் தீரமாதாவது தேவி உறையும் இடம் என்று கேட்கிறார்கள் தமிழ் மக்கள். தங்களைத் தங்கள் மத்தியில், வைத்து, காணவேண்டுமெனத் தாயிழந்த கன்றுபோல தவிக்கிறது, தமிழ்ப் பூமி!''

''சுயராஜ்யம்—சுதந்தரம்—புது வாழ்வு—என்னப்பா, ஒன்றும் எனக்குப் புரியவில்லையே!''

''மாதாவே, மாபாவிகள் தங்களுக்கு இவை யாவும் தெரியாமல் திரை போட்டுவிட்டார்கள். வஞ்சி நாட்டில் கோயில் கொண்டிருந்த தங்களை, வஞ்சகமாகக் கொண்டு வந்து பூட்டிவிட்டார்கள்! அம்மா, தங்களைக் கூண்டுக்குள்ளே வைத்திருக்கிறார்களே கொடுங்கோலர்கள்! அதை எண்ணும்போது நெஞ்செலலாம் வெடிக்கிறது. தமிழ்த் தெய்வத்துக்குக் கூண்டு! இரும்புக் கூண்டு! காலை மாலை போற்றிப் பூஜிக்க, நாங்கள் காத்துக்கிடக்கிறோம்—தாங்களோ கண் காட்சிச் சாலையில் கிடக்கிறீர்கள். என்னே கோரம்! என்னே காலத்தின் கோலம்!!''

''தம்பி! உனது உரை கேட்கக் குளிர்கிறது, உள்ளம். தமிழ் மகனின் வீர உரைகள் கேட்டு, பல நாட்கள் ஆகிப்போன, என் இதயத்தில் வீழ்ந்த தேன்துளிகள் உனது வார்த்தைகள். நீ, வாழ்க! நம் நாடு வாழ்க!''

''பொன்னுரை புகன்றீர்கள், அம்மா, தங்கள் புதல்வர்களுக்கோர் நல்லுரை நவின்றீர்கள்! இதைக் கேட்டால் அவர்கள் நினைவெல்லாம் தமிழ் மணக்கும்! நெஞ்சமெல்லாம் வீரம் குதிக்கும்! ஆனல...''

''ஆனல், என்ன...கேள்!''

''எனது வேண்டுகோளை—அல்ல அல்ல!! தமிழகத்தின் வேண்டுகோளை''

''கூறு, செல்வா, கூறு!''

''மறுக்கமாட்டீர்களே, அம்மா!''

''செய்தியைக் கூறாமலே, பதில் விரும்புகிறாயே''

''ஏட்டைக் காட்டினேம், இ தான் நம் பத்தினித் தெய்வத்தி பார்புகழ்ச் சரிதை என்று கூறினே கேட்கவில்லை! பாரீர், இதுவே ந பத்தினிமாதேவி குடிகொண்டிருந் இடம் என கோயிலைக் காட்டினே 'கோயில் சரி—எங்கே தாய்?' எ கின்றனர், தமிழர்கள். ஆகவே மாதா! தாங்கள் தமிழ் நாடு வ வேண்டும்! 'வருகிறேன்,' என வ மருள வேண்டும்!!''

''இத்தனை நாட்கள் இல்லா இந்த ஆசை, இப்போது மட்டு எங்கிருந்து வந்தது?''

''முன்பு நாங்கள் அடிமைய யிருந்தோம். இப்போது, நாடு, சு ராஜ்யம் பெற்றுவிட்டது. நாங்கள் எல்லாம் சுதந்தர புருடர்களாகிவிட் டோம். ஆகவே,...''

''இதுதானு, காரணம்?''

''இன்னும் ஒன்று உண் அம்மா! தங்கள் உரு தமிழகத்தி இலாததால், நாடு தவிக்கிறது! ப தொல்லைகளுக்கு ஆட்பட்டுத் திகைக்கிறது! எதைத் தொட்ட லும் தொல்லை! எப்பக்கம் திரும்பி னும் வறுமை—பசி—கேடுகள்!''

''தமிழ் நாட்டிலா, இத்தனை யும்!''

''ஆம், தாயே!''

''அதுவும், நான் இல்லாத கா ணத்தாலா?''

''ஆமம்மா!''

''என்ன உளறல்!''

''உளறல் அல்ல, அம்மா உண்மை. கடந்த போர் நட பெற்றதே, தங்களுக்குக் கவனமிருக் கிறதா?''

''கவனமில்லாமல! அப்பப்பா எத்தனை முறை இந்த மாளிகைக் எதிரே குண்டுகள் விழுந்தன தெ யுமா? மக்கள் அலறிய சப்த மாடமாளிகைகள் வீழ்ந்த பேரொ ...நினைத்தாலே, எனக்கு, மதுர எரிந்ததுதான் கவனத்துக்கு வ கிறது''

''அவ்வளவு பயங்கரம் பார்த்தீ கடைசியில வென்றது யார்? பிரி டிஷ்காரர்கள் தானே!''

"ஆமாம்!"

"அந்த வெற்றி எப்படிக் கிடைத்தது. அவர்கள் திறமையாலா, அல்லது படை பலத்தாலா, வீரத்தாலா?"

"அவைகள் தானே போரில் வெற்றி காண முக்கியம்"

"அவைகள் முக்கியம்தான். ஆனாலும் அதுமட்டுமல்ல, அவர்கள் வெற்றி பெற்றதுக்குக் காரணம். தாங்கள் இங்கே—இலண்டனில்—இருந்ததுதான்!"

"நானா—சிலை வடிவில், பேசாது அசையாது, ஆடாது நகராது, பூட்டப்பட்டிருக்கும், நானா?"

"ஆம், தாயே, ஆம்!"

"பிரியத்தால் பிதற்றாதே, தம்பீ! தமிழகம் வரவேண்டும் என, எனக்குக்கூட ஆசைதான். என் கணவனும் நானும் கை கோர்த்து உலவிய இடம், கணிகை மாது மாதவி காரணமாய் கணவன் என்னை விட்டேகிய காலை கவலையோடு கிடந்த இடம், பிறகு கணவர் என்னிடம் சேர்ந்து நாம் மதுரைக்குப் புறப்பட்டுச் சென்றபோது வழியில் நாங்கள் களைப்பாறிய இடம்...... அது சரி! ஏன் தம்பி, பார்ப்பார் முதலிய மக்கள் இன்னும் இருக்கிறார்களா, அங்கு?"

"நலமாக உள்ளார்கள், அம்மா!"

"வாழட்டும்! வாழட்டும்!!"

"ஏன் அம்மா! அவர்களை மட்டும் கேட்டீர்கள்?"

"ஒன்றுமில்லை. நானும் என் கணவரும் புகார்புரியிலிருந்து மதுரை மாநகர் நோக்கிப் புறப்பட்டோமல்லவா?"

"ஆமாம்!"

"அப்போது, இருவரும் சோழ நாட்டு உறையூர்வரை சென்றுவிட்டோம். அங்கிருந்து நேராக மதுரைக்குச் செல்லும் விழைவுடன் இருக்கையில், ஒரு மறையோன் எங்களை எதிர்ப்பட்டார் அவரை என் கணவர் 'மாமறை முதல்வ, மதுரைச் செந்நெறி கூறு' என்று கேட்டார். அவ் வேதியரும், எங்களுக்கு மதுரைக்குச் செல்லும் வழி இது, என்று காட்டினர். அது நினைவுக்கு வந்தது அது தான் கேட்டேன்"

"அதற்கும் இதற்கும் என்ன தாயே சம்பந்தம்?"

"மதுரைக்குச் செல்ல, எங்களுக்கு வழிகாட்டியாக முதலில் தென்பட்டவர் அவர் தான். அவர் காட்டிய பாதையில் நாங்கள் சென்றோம்; ஆனால் திரும்பினோமில்லை. நான் 'கற்சிலை'. ஆனேன்! என் கணவர் பிணமானார்!!"

"தாயே! கோவலனது பிரிவு தாளாது வருந்திக் கிடந்தபோது தங்களிடம் தேவந்தி என்றொரு......"

"பார்ப்பனத் தோழியைத்தானே சொல்கிறாய்!"

"ஆமாம்! கணவனைக் கூடவேண்டுமானால் 'சோமகுண்டஞ் சூரியகுண்டந்துறை மூழ்கிக் காமவேள் கோட்டந் தொழுதார் கணவரோடு தாமின்புறுவர், உலகத்துத் தையலார் போகம் செய் பூமியினும்போய் பிறப்பர்' என்று சொல்லித் தங்களை 'அங்கு வருகிறாயா' என்று கேட்டாளல்லவா?"

"தம்பி! என் கதையை நன்றாகப் படித்துள்ளாயே!"

"அது தான் அம்மா என் தொழில்— கடமை எல்லாம்"

"தேவந்தி என்னை அழைத்தாள் கோயிலுக்கு. ஆனால் நான் போகவில்லை. கணவனல்லது பிற தெய்வங்கள், தெய்வமாகா! அங்கு நான் வருவதும் 'பீடன்று' என்று சொல்லி விட்டேன்"

"தெரியும் தாயே! தங்களைப்பற்றி, எதுதான் எங்களுக்குத் தெரியாது என்று நினைக்கின்றீர்கள். தங்கள் மீதுள்ள பாசத்தால், பக்தியால், எம் மனோரெல்லாம் தங்கள் கதையைப் போற்றுகிறோம் நாள் தோறும். ஆகவே தான், தாங்கள் அங்கு வர வேண்டும் என்று வேண்டுகிறேன்"

"வருகிறேன். ஆனால்..."

"ஆனால், என்ன தாயே!"

"நான் கேட்கும், சில கேள்விகளுக்கு விளக்கம் தருகிறாயா?"

"தாய்ச் சொல் தட்டும் தனயரல்லம்மா, தமிழர்."

"சரி. என் காலத்திலே, என் கணவரை என்னிடமிருந்து பிரித்தாளே கணிகை மாது, அவளைப் போல, அவளது குலம் போல......"

"தமிழ் நாட்டில் நிறைய இருக்கிறார்கள்!"

"ஊம்...நிறைய,......இருக்கிறார்கள்! விலைமாதர்கள் இன்றும் இருக்கிறார்கள்! கற்பை இழந்து உயிர் வாழும் நிலையில் கன்னியர் கூட்டம் இன்னும் இருக்கிறது! ஊம்...... தமிழ் பாடி வாழ்ந்த தமிழ்ப்புலவர்கள், பாவலர்கள் இருக்கிறார்களா? நாடெங்கும் இருக்கிறார்களா?"

"இல்லாமலில்லை. இருக்கிறார்கள்!"

"என்தடுமாறுகிறாய், தம்பீ! தமிழ் முன்போல இருக்கிறதா அல்லது வேற்றுமொழிகளுக்கு......"

"........."

"ஏன், தம்பீ! மவுனம். ஏன், நான் தமிழ் நாடு வரத்தானே வேண்டும்"

"ஆம் தாயே!"

"அப்படியானால், தமிழகத்தைப் பற்றி ஒளியாது கூறு. தமிழின் நிலை..."

"கேவலமாகத்தான் போய்விட்டது அம்மா! அதிலும் இப்போது இந்தி என்றொரு வேற்றுமொழி, எங்கள் ராஜாங்க மொழியாகப் போகிறதாம்!"

"சரி, காவிரியும் வைகையும் இருக்கின்றனவா? கருத்தைக் கவரும் மலைத் தொடர்புகள் மறையவில்லையே!"

"காவிரியும் வைகையும் உள்ளன. மலைகளும் மறையவில்லை!"

"தமிழகத்தின் வளம் குன்றவில்லை. மகிழ்ச்சி மக்களிடை பிணி, பசி, ஏக்கம், தொல்லை..."

"இருக்கத்தான் இருக்கின்றன, அம்மணி!"

"ஏன், சோகமாகக் கூறுகிறாய். முன்பு சொன்னபடி, வேகும் உயிர்கள், சாகும் மனிதர்கள்..."

"அதெல்லாம் உண்மைதானம்மா!"

"அரசு, குற்றமுணராது கொடுமை செய்யும் இயல்புடையதா? அல்லது நல்ல அரசா? கொலை, களவு, சிறை, தண்டனை இவை உள்ளனவா? அல்லது அற்றுப் போயினவா?"

"அவையெல்லாம் இருக்கத்தான் இருக்கின்றன அம்மணி! உண்மையாகச் சொன்னால் முன்னைவிட இப்போது......"

"தெரிகிறது! புரிகிறது! 1800 ஆண்டுகளுக்குமேல் ஆகிவிட்டன. இருந்தும் நிலைமை மாறவில்லை. அதற்குப் பதில் கொடுமைகள்! அதைப் போக்கமுடியாத கொடுங்கோலாட்சி! ஐயோ, வெட்கமான காட்சியன்றோ, அது! வீர பூமி, சோரம்போய் கிடக்கிறது! சூரர்கள் சோம்பேறிகளாகிவிட்டனர்! இன்பம் மறைந்துவிட்டது—துன்பம்! துன்பம்!! எங்கும் துன்பம்!!! ஏழ்மைத் தொல்லைகள், எங்கும்! கற்பை விலை கூறிடும் கணிகையர்! காலிருந்தும் கையிருந்தும் உழைக்காது ஊர் மேய, ஒரு உலுத்தர் கும்பல! நீதிக்குத் திரை! அரசியல் பிழைத்தோர்—அவர்தம் திருக்கூத்து; சிறை—தண்டனை—வழக்கு! தமிழுக்கு வாழ்வில்லை; தமிழாண்ட மன்னர்களில்லை. சோழன் செங்கோல், பாண்டியன் முரசம், சேரன் வீரம்—எல்லாம் பாழ். இது தமிழகம். என் தம்பீ! இது தமிழகம். அங்கே நான் வரவேண்டும். கலைவிரி கோலமாய், என்னைப்போல் கிடக்கிறது—தமிழ் பூமி. அங்கே என்னை அழைக்கிறாய்! தம்பீ, இந்த சவக்கோட்டைக் காண என்னை அழைக்கிறாய்!!"

கோபாக்கினி, அம்மையின் முகத்தில்! குனிந்த தலை நிமிராது நின்றார், 'எனக்குத் தெரிந்தவர்'! 'வர வேண்டும்! அங்கேயா, நான்வரவேண்டும்?' என்று அம்மை கேட்ட ஆவேச சத்தொனி எங்கும் எதிரொலித்தது.

"ஆமாம்! வரவேண்டும்—தாங்கள் வரத்தான் வேண்டும்!" என்று என்னையுமறியாது வாய்விட்டு அலறினேன்.

முதுகில் சுளீரென ஒரு அடி. 'வந்துவிட்டேனடா, வந்துவிட்டேன் நீ தூங்காதே, எழுந்திரு' என்று யாரோ என்னை எழுப்பினர். விழித்துப் பார்த்தேன். வீரன்—என் நண்பன்—நின்றுகொண்டிருந்தான். பக்கத்தில், என் படுக்கையில் 25-3-51 தேதிய தினசரி இதழ்கள் கிடந்தன.

"சரிதான், கனவுலகத்தில் மிதக்கிறாய்போலும்!" என்றான், அவன்.

"வா, அப்பா வீரா! என்ன சங்கதி?"

"சர்வம் சமய மயம்!"

"என்னப்பா வந்ததும் வாராததுமாய் புதிர் போடுகிறாய்"

"புதிருமல்ல, சதிருமல்ல. உண்மை. சர்வம்—சமயம்—மயம்"

"வெட்டிப் பேச்சு வேண்டாம். வீரா! விஷயமிருந்தால் சொல்லு" என்றேன், கொஞ்சம் கோபத்துடன்.

"உனக்குக் கோபந்தான் வரும். 'சர்வம் சமயம்'-இது தெரியாதவன் தானே நீ. என்னிடம் கோபித்துக் கொள்ளத்தான் செய்வாய்"

"ஐயா, பெரியவரே! நான் கோபங் கொள்ளவில்லை. கொஞ்சம் விஷயத்தைச் சொல்கிறீர்களா?"

"வா அப்படி, வழிக்கு. சென்னையில், செவியெல்லாம் தமிழ்த் தேன் பாய்ந்தது. நெஞ்சையள்ளும் நாடகக் காப்பியமாம் சிலம்புச் செல்வத்துக்கு, விழா எடுத்தனர். தமிழ் மக்களின் நுண்மாண் நுழைபுலப் பன் மாண்பினை விளக்கினர். கேட்டேன்!

'குமரியோடு வட இமயத்து
ஒரு மொழி வைத்து உலகாண்ட
சேரலாதற்குத் திகழொளி
ஞாயிற்று
எழ்பரி நெடுந்தேர்ச் சோழன்
தன்மகள்
நற் சோணை ஈன்ற......'

நன் மகனும் இளங்கோவின் இன்பக் காப்பியம் பற்றிக் கூறக் கேட்டேன். குளிர்ந்தேன். அமுது கொண்டு வடித்ததோ, இன்பம் நனைத்து எடுத்ததோ, துன்பம் தீர்க்க முளைத்ததோ, என்று வியந்தேன்..."

"வீரா! நீ கூடப் புலமை பெற்றுவிட்டாய், பாராட்டுகிறேன். வாழ்க!...சரி, சர்வம் சமய மயம் என்றாயே, என்ன பொருள் அதற்கு?"

"பொருளில், கூற யான் புலமையற்றேன் அல்லேன்—தெரிவாய்!"

"சரி, வீரா! சர்வம் சமய மயம் பற்றிச் சொல்லு"

"சொல்கிறேன். தமிழ் கற்றோருக்கே கொஞ்சம் தருக்கு அதிகம் என்று நினைக்கிறேன். நீ, என்ன சொல்கிறாய்!".

"இருக்கலாம் — இருக்கத்தான் வேண்டும்!"

"பாரேன்! சமயம், கிடைத்தால் போதும், விடோம் என்றல்லவா வீரமுழக்கமிட்டிருக்கின்றனர். சிலப்பதிகார மாநாடு, என்றால் சிலம்பைப் பற்றி, அதன் ஆசிரியரின் அருந்திறன் குறித்து, மட்டுமே பேசுவர் என்று எண்ணினேன். ஆனால் என்ன தெரியுமோ? கேட்டால் நீயே வியப்புக் கொள்வாய். ஒரே சீற்றம். ஒரே ஆத்திரம். வெளுத்துக் கட்டிவிட்டார்கள்!"

"யாரப்பா, பேசியது. அத்தகைய துணிவோடு சொற்பொழிவாற்றியது யாரப்பா? கல்கியா, வாசனா, ஜகந்நாதனா, சி. ஆர். சீனிவாசனா, தினமணியா, இந்துவா?"

"அவர்கள் ஏனப்பா, அங்கு வருகிறார்கள்! சம்ஸ்கிருத மாநாடென்றால் சஞ்சரித்திருப்பார்கள். இது தமிழ் போற்றும் கூட்டம்தானே! ஆகவே, அவர்கள், எப்படி வருவார்கள். அவர்கள் வர இதென்ன, சாமவேத மாநாடா, சதிர்க் கச்சேரியா, சங்கராபரண சங்கீத ஆராய்ச்சியா?"

"பிறகு, யாரப்பா சீறியதும் மோதியதும்!"

"நீ—சிலம்பு மாநாடு பற்றிய செய்திகளைப் பார்த்தாயோ?"

"பார்த்தேன். படித்தேன். தமிழ்ப் பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை-அதைத்தான் விடவில்லையே—பேசும்போது "தமிழ் தெய்வத்தின் உருவம் தமிழ்நாட்டில் இல்லை. இங்கிலாந்தில் பொருட்காட்சிச் சாலையில் இன்று கண்ணகி உருவச் சிலை இருக்கிறது. சென்ற யுத்தத்தில் ஆங்கிலேயர் மீண்டது குறித்து பலர் ஆச்சரியப்பட்டனர். ஆனால் எனக்கு ஆச்சரியமில்லை. நம் கண்ணகி அவர்கள் நாட்டிலிருக்கும் வரை அவர்களை எவராலும் வீழ்ச்சியடையச் செய்ய முடியாது. அந்நாட்டைக்கண்ணகி காப்பாற்றினாள்" என்று குறிப்பிட்டிருக்கிறாரே, அதை நினைத்தவண்ணம் படுத்தேன். 'கனவு' ஒன்று கண்டேன்—அதாவது......"

"அதிருக்கட்டும்! மேலும் பல, அவர் பேசியிருக்கிறாரே, அதை கவனித்தாயோ?"

"எதை?"

"எதையா? அதைகேட்டபோது தான், எனக்கு 'சர்வம் சமய மயம்' என்று ஞாபகம் வந்தது சந்தர்ப்பம் கிடைத்தால், விடமாட்டார்கள் அவர்கள் என்பது புரிந்தது.

(9-ம் பக்கம் பார்க்க)

மகான்கள் வெள்ளம்!

தண்ணீர் கண்டு பிடிக்க, ஒரு மகான் கிடைத்தாரல்லவா? பானிவாலா மகராஜ் — அவர் தண்ணீரோடு நிறுத்திக் கொள்ளவில்லை. அவரது ஆராய்ச்சி, தண்ணீரிலிருந்து, சிலைக்கும் தாவிவிட்டது!

ஜல மகராஜ், சிலை மகராஜாவாகிறார்!

இந்த இடத்தில் தோண்டினால், நீர் ஊற்றுத் தோன்றும் என்று கூறி வந்த மகான், அதைவிட மிக 'அவசியமான' வேறொரு ஆராய்ச்சியிலே இறங்கிவிட்டார் — ஜல ஆராய்ச்சியிலே 'மூழ்கி' விடப் போகிறார் என்று பயந்த டக்க மந்திரிகளுக்கு ஆறுதல் கூறுவதுபோலக் கூறியுள்ளார்.

மறைந்த சோமநாதர் ஆலய லிங்கத்தைத் தோண்டி யெடுக்க முடியும் என்று கூறிவிட்டார்.

இனி நமக்கென்ன குறை? ஜல மகராஜ், லிங்கங்களையும் கண்டு பிடிக்க ஆரம்பித்துவிட்டார். அமெரிக்காவைக் கண்டானும் கொலம்பஸ் — இதோ, எங்கள் 'மகான்' லிங்கம் காண்கிறார் — யார் மேல், நீங்களே கூறுங்கள்!

அது மட்டுமா? அவருக்கு 'சந்ததி' கூட ஏற்பட ஆரம்பித்துவிட்டது!

மற்றொரு ஜலமகராஜாவும் தோன்றிவிட்டார் — ஜலமகராஜாக்கள் ஆயிரமாயிரந் தோன்றி நீடூழி வாழட்டும்-மௌடீகம் நெடுங்காலம் வாழட்டும்!

பெப்ஸு யூனியனைச் சேர்ந்த ராஜபுரா என்ற சிறு நகராண்மைக் கழகத்தில் ஓவர்சியராக இருந்த டல்வீர்சிங் என்பவர், 'பானிவாலா மகராஜாகிவிட்டார். அவர் அம்பாலாவுக்கு அருகில் ஒரு தண்ணீர் இருக்குமிடம் கண்டு பிடித்து விட்டார்.

நீங்கள், நம் நாட்டில் கிணறு கட்டும், ஒவ்வொரு கொத்தனாரையும் ஜலமகராஜாவாக ஆக்கிவிடலாம் என்று யோசிக்கிறீர்களா? அது முடியாது! — அவர்களெல்லாம் வடக்கே வாழ்பவர்கள் — அதனை மனதில் நிறுத்துங்கள்.

மகான்கள் வெள்ளம்போல் பெருகுகிறார்கள் — இனி என்ன குறை!

காட்டுவோம் கருப்புக் கொடி!

6–4–51 ராசேந்திரபிரசாத் சென்னை வருகிறார்!

பிரசாத்

டில்லி ஆதிபத்யத்தின் தலைவர்!

வாட்டிடும் வடநாட்டின் மூலவர்!

நமது உணர்ச்சியைக் காண வேண்டியவர்!

நமது அதிர்ப்தியைக் காட்ட அனைவரும் வாரீர்!!!

இடம்: கார்ப்பரேஷன் ஸ்டேடியம் மைதானம்

நேரம்: 6–4–51 மாலை 5-மணி

எல்லோரும் காட்டுவோம் கருப்புக் கொடி!

திராவிட நாடு

ஞாயிறு] 1—4—51 [காஞ்சி

சிறு பொறி

★

மாகாணங்களின் கழுத்தை நெரிக்கும் இந்தக் கொள்கையைக் கைவிடும்படி சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன்.

X X

மாகாணங்களின் சவங்கள் மீது மத்திய சர்க்கார் கோட்டை கட்டக்கூடாது.

* * *

மாகாணங்கள் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ளன என்றால் அதற்கு அதன் நிர்வாக ஊழல் காரணமல்ல; மத்திய சர்க்கார் அவற்றின் விஷயத்தில் கவனம் செலுத்தாததே காரணம்.

* * *

மத்திய சர்க்காருக்கும் மாகாண சர்க்காருக்குமிடையே பணம் ஒதுக்குவதை மாற்றியமைக்க சர்க்கார் உடனடியாக நிபுணர் கமிட்டி ஒன்றை நியமித்தாக வேண்டும்.

X X X

கூறுவது நாமல்ல, நூருல் அமீன்! டெல்லியிலே பேசவில்லை—காரச்சியில்!

பாகிஸ்தான் சர்க்கார்மீது பாய்ந்திருக்கிறார், கிழக்கு வங்கப் பிரதமர்—இந்திய சர்க்கார்மீது, சென்னைப் பிரதமர் இப்படிக் குற்றம் சாட்டவில்லை!

பேசியது, பார்லிமெண்டில்—நினைவிலிருக்கட்டும்!

அவர் பேசி முடித்ததும், கிழக்கு வங்க அங்கத்தினர்கள் கை தட்டினர்—பெருத்த ஆரவாரம் செய்தனர்.

அவர், பாகிஸ்தான் சர்க்கார்மீது பலமான குற்றச்சாட்டுகளைச் சாட்டினார். வருமான வரியில், தம் மாகாணத்திற்குரிய பங்கு சரிவரச் செலுத்தப்படவில்லை — சணல் தீர்வையில் 62 சதவிகிதம் அளிப்பதற்குப் பதில் ஒருதலைப் பட்சமாக முடிவு செய்து விட்டது-மாகாணங்களை நிர்வகித்து வந்தவர்களையெல்லாம் அவர்களின் அனுமதி பெற்றோ, பெறாமலோ அவர்களை எடுத்துக்கொண்டு விட்டது — இப்படி குற்றப் பட்டியல் நீட்டியுள்ளார்.

இந்தச் செய்தியை மிகப் பிரமாதப்படுத்தி வெளியிடுகின்றன, நம் தேசியத் திருத்தாள்கள் — ஆனால் நம் இந்திய சர்க்கார் செய்யும் தீச்செயல்களைக் கண்டிக்க மனமில்லை.

நூருல் அமீன் பேசினால், தங்கள் ஆத்திரத்தைத் தீர்த்துக்கொள்ளும் வகையில் செய்திகளை வெளியிட்டு திருப்தி தேடுகின்றன. அவர்களுக்கு, மாகாண நலன் பாதுகாக்கப்படவேண்டும் என்ற ஆசை யிருக்கலாம்—ஆனால் அதனை வெளியில் காட்டிக்கொள்ள முடியாமல், இப்படிச் சந்தர்ப்பம் கிடைக்கிற பொழுது, செய்திகளைப் பிரசுரித்து மனச்சாந்தி பெற முயற்சி செய்கின்றன போலும்!

பாகிஸ்தானில் பேசிய பேச்சு—இந்தியாவில் இவ்வளவு பெரிய அளவில்! ஆனால் இந்தியாவிலேயே இம்மாதிரிச் செய்திகளை இருட்டடிப்புச் செய்து விடுகின்றன

நூருல் அமீன் கூறினால் போடுகின்றனர்—கனம் கோபாலர் பேசினால், அதனை விமரிசைப் படுத்துவதில்லை!

பாகிஸ்தான் உறுப்பினர் ஒருவர், மத்திய சர்க்காரைத் தாக்கி ஒரு வார்த்தை பேசியிருந்தால் போதும் —விடமாட்டார்கள், தேசிய ஏட்டு வீரர்கள். ஆனால் நம் நாட்டுப் பிரதிநிதியாரேனும் அப்படிக் கூறியிருந்தால் அதனை வெளியிடாது விட்டாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை.

நூருல் அமீன் சாட்டியுள்ள குற்றங்களை மற்றொரு முறை படியுங்கள்—இவைகளில் எதனை இந்திய மத்திய சர்க்கார் செய்யவில்லையென்று கூறுங்கள்.

மாகாணங்களின் கழுத்தை நெரிக்க வேண்டாம்!—எச்சரிக்கிறார் நூருல் அமீன். நம் மத்திய சர்க்கார் கழுத்தை நெரிக்கவில்லை-கழுத்தை நெரித்தால் ஒரே தடவையில், நிம்மதியாக இறந்து விடலாம். இதுவோ, வயிற்றை நெருக்கி, நிமிடத்திற்கு நிமிடம் வேதனையை அனுபவிக்கச்சொல்லிச் சித்திரவதை செய்கிறது. பட்டினி போட்டு வதைப்பதைவிட, கழுத்தை நெரித்துக் கொல்வது எவ்வளவோ மேல்!

மாகாணங்களின் உரிமைகள் அத்தனையும் பறிபோய்விட்டன. அவைகள் நடைப்பிணங்களாக உள்ளன. இந்தப் 'பிணங்கள்' மீதுதான், மத்திய சர்க்கார் கோட்டை கட்டி, அந்த உப்பரிகையிலே உல்லாசமாக நிற்கிறது!—இதனை நூருல் அமீன் சொல்லித் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை எதற்கெடுத்தாலும் டெல்லி பறந்து செல்லும் மந்திரிகளைப் பார்த்தாலே போதும். 'டெல்லி'க்கு அடிக்கடி போகவேண்டும் என்பதற்காக 'ஹனுமான்' விமானம் வாங்கிய பொழுதே புரிந்திருக்குமே!

மாகாணங்களின் பற்றாக்குறைக்குக் காரணம், மத்திய சர்க்காரின் கவனக் குறைவு என்கிறார் அவர்—நாம் இதனை, பலமுறை, பலமாக, கவனப்படுத்தியிருக்கிறோம், நாட்டோருக்கும், நாடாள்வோருக்கும்! வேறெதையும் ஆராயவேண்டியதில்லை—உணவு விஷயம் ஒன்றே போதும், இதனைப் புரிந்துகொள்ள! உணவு நெருக்கடி ஏற்பட்டதற்கே காரணம் மத்திய சர்க்கார், நாட்டின் நிலையைப் புரிந்து கொள்ளாமல், சுயதேவை பூர்த்தியென்று புலம்பிக் கொண்டிருந்ததால் தான்—தெருக்களில் பிணங்களைக் கண்டோம்! பசி, 'எமனாக' மாறிய கோரத்தைப் பார்த்தோம்.

மத்திய சர்க்காருக்கும், மாகாண சர்க்காருக்கும் பண விஷயத்தில் ஒரு திட்டம் தர ஒரு கமிட்டி வேண்டும் என்கிறார்—நாமோ. வரிகளில் வளமான வரிகள் மத்திய சர்க்காரிடம், இந்நிலையில் மாகாணங்களுக்கு எப்படிப் பணவசதி இருக்கும் என்று எடுத்துக்காட்டியிருக்கிறோம்.

நூருல் அமீன், கூறியவை, பாகிஸ்தான் சர்க்கார் மீது! அதே குற்றச் சாட்டுகளை இன்னும் பலமாக நாம் சாட்டியிருக்கிறோம், இந்திய சர்க்கார்மீது! இங்குள்ள தேசிய ஏடுகள் தீட்ட மறந்தன—மறுத்தன! அவர்கள் ஏட்டில் இடமில்லை, பேனாவில் 'மை' இல்லை!

நூல் விஷயத்தில் இந்த ராஜ்ய தேவையைப் பூர்த்தியாக்க கவனிக்கப்படும் வரை இந்த

ராஜ்யத்திலிருந்து இதர ராஜ்யங்களுக்கோ, இதர வெளிநாடுகளுக்கோ நூல் ஏற்றுமதியை அனுமதிக்கக் கூடாது என இந்திய சர்க்காருக்குத் தெளிவாக, கண்டிப்பாக நாங்கள் தெரிவித்திருக்கிறோம்.

நூருல் அமீன் போல, குறைகளை எடுத்துச் சொல்வதோடு, நிறுத்திக் கொள்ளவில்லை—சென்னை மந்திரி பெருமாள்சாமி மேலும் ஒருபடி சென்றுவிட்டார்—குற்றம் சாட்டுவதோடு நிற்கவில்லை—குற்றத்தை நீக்க ஏற்ற மருந்தும் கூறிவிட்டார்.

இந்த மாகாணத்தில் நூல் பஞ்சம் அதிகம் என்று சொல்லவில்லை, கனம். அதற்குக் காரணம், இங்கிருக்கிற நூல் வெளியில் ஏற்றுமதி செய்யப்படுவதால் தான் என்பதையுணர்ந்து, அதனை நிறுத்தும்படி மத்திய சர்க்காருக்குத் தெரிவித்துவிட்டார்.

மந்திரி மண்டியிட்டு வேண்டிக் கொள்ளவில்லை—தெரிவித்திருக்கிறார்—அதுவும், சாதாரணமாக அல்ல! கண்டிப்பாகத் தெரிவித்துள்ளார். அந்தக் கண்டிப்பான அறிவிப்பு, அவர்களுக்குப் புரியாமல் போய் விடாது—ஏனெனில், கண்டனத்தை, தெளிவாகத் தெரிவித்துள்ளார்.

இதனை, வெளியிட்ட ஏடுகள், எப்படித் தலைப்புகள் தந்துள்ளன—மத்திய சர்க்காரைக் கண்டிக்கும் முறையிலல்ல — விஷயத்தை மறைக்கும் வகையில்புண்ணுக்குப் புனுகு பூசுவதைப்போல!

நூருல்அமீன் பேச்சுக்குத் தலைப்புகளைப்பாருங்கள்.

> பாகிஸ்தான் சர்க்காருக்கு எதிர்ப்பு, மத்திய சர்க்காருக்கு பலமானகண்டனம், மாகாண வரிகளை விழுங்குகிறது, சவங்களின்மீது கோட்டை கட்டுகிறது.

ஆனல், மத்திய சர்க்கார் இதுவரை கடைப்பிடித்துவந்த நூல் கொள்கையையே எதிர்த்துப் பேசியுள்ளார் ஒரு மாகாண கனம் — அதற்குத் தலைப்புகள்,

> நூல்பற்றி மந்திரி யோசனை
> ஏற்றுமதியை நிறுத்தினல் நலம்
> மத்திய சர்க்கார் ஆவனசெய்யும்.

இந்தத்தேசிய ஏடுகளைப்பார்த்தால், அழுது தீர்ப்பதா, சிரித்துப் பார்ப்பதா, நம்முறைகளை என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை.

ஒரு கண்ணில் வெண்ணெய் — மற்ருெரு கண்ணில் சுண்ணும்பு— தடவுகின்றன இந்த ஏடுகள்.

இதுவரை, நூலின்றி நெசவாளி மக்கள் வாடியபொழுது நாம், இதற்குக்காரணம், நம்நாட்டு நூல் நம் நாட்டிலேயே பங்கிடப்படாமல் போனதுதான் என்று கூறினேம். அதனை யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை.

நிலைமை முற்ற முற்ற, உண்மையை உணர்ந்துகொண்டார்கள். கனம் பெருமாள்சாமி நாம் கூறியதை இப்பொழுது கூறுகிறார்.

நாம் சொல்கிறபொழுது ஏற்றுக் கொள்வதில்லை — பிறகோ, அதனையே செய்யத்தயங்குவதும் இல்லை; இது அவர்களுக்கு வாடிக்கையாகப் போய்விட்டது!

நூருல் அமீன் கூறுகிறபொழுது 'தம்பாளம்' போடும் கூட்டம், கனம் பெருமாள்சாமி கூறினல் வாய்மூடி மௌனியாவானேன்?

கனம் பெருமாள்சாமி இன்று பேசுவது சிறுபொறி--இதுநாளையே பெருந்தீயாகும் ---அமீனுக்குத்திரையிடாமல், இவருக்குத் திரையிட்டால், பொறிபட்டு எரியும் - திரை மறையும் என்பதைமட்டும் மனதிலிருத்திக்கொள்ளவேண்டும், தேசிய ஏடுகள்—அவர்களின் திருத்தொண்டில் இத்தகையதகிடுதத்தம்கூடாது.

ஒரே விஷயம் - அதனை பாகிஸ்தானில் கூறும் பொழுது ஒரு வகையில், இந்தியாவில் பேசும் பொழுது வேறுவகையில் வெளியிடுவது அபாயம்—அவர்களுக்கே ஆபத்து!

சிறு பொறி-திரை கட்டினல் பெருந் தீயாகும்!

12-ம் பக்கத் தொடர்ச்சி

கொள்ளமுடியாத அப்பாவியாக அவர் இருக்கிறாரே! தூங்கும்தோன்றல்கள் நிறைந்த காங்கிரஸ் சட்டசபைக் கட்சிக் கூட்டத்தில்போய், 'பைத்தியம்'போலப் பேசியிருக்கிறார் —பாவம், அவர் ஒரு 'அப்பாவி'!

பட்ஜட் விவாதம் முடிந்தவுடன் சட்டசபை உறுப்பினர்கள் எல்லோரும் அவரவர் தொகுதியில், காங்கிரஸ் பதவிக்கு வந்தபிறகு செய்த சாதனைகளை எடுத்துரைக்கவேண்டும்.

நல்லவேளை, கொடுத்துவிட்டார் மோகன்லால்-இந்தச்சாமான்யவேலையையா, அவர்கள் செய்வார்கள்! பொதுக்கூட்டங்களில்போய் பேசிக்கொண்டிருக்க, அவர்கள் வேலையற்றவர்களா? அவர்களுக்கு ஆயிரத்தெட்டு அலுவல்கள் — அவற்றில் இந்த'பொடிவிஷயம்' அவர்கள் நினைவிற்கு வருவதே கடினம் — அப்படி வந்தாலும், யார்போய் இதையெல்லாம், இந்த 'சாதாரண' ஜனங்களிடம் சொல்லிக்கொண்டிருப்பார்கள்!

அவர்களுக்கு ஓய்வு ஏது?

சட்ட சபைக் கூட்டம் நடைபெறாத நாட்களில், சொந்த ஊரில் இருக்க முடிகிறதா? இந்த 'பர்மிட்' வாங்க, அந்த மந்திரியைப் பார்க்க வேண்டும் — மருமகனுக்கு, மருத்துவக் கல்லூரியில் இடம் வாங்க, இந்த மந்திரியின் சிபார்சு வாங்க வேண்டும் — அடுத்த தேர்தலில் ஏகாம்பரம் உதவியில்லாமல் என் செய்வது? அவன் கேட்கும் 'லைசன்ஸை' வாங்கிக் கொடுத்துத் தொலைக்கவேண்டும் — இப்படி பல வேலைகள்!-இவைகளை விட்டு விட்டு பொது மக்களிடம் போய்ப் பேச வேண்டுமாம், மோகன்லால் விஷயந் தெரியாதவர்!

அவர்கள் மட்டுமா?-அவர்களின் 'பெரியோர்கள்' மட்டும் என்ன செய்கிறார்கள்? மோகன்லால் இதனை அறியாதவரா, என்ன — இப்படி 'அபத்தமாக'ப் பேசலாமா?

காங்கிரஸ் சாதனைகளை, மக்களுக்குச் சொல்லவேண்டும், சட்ட சபை உறுப்பினர்கள் — என்கிறார் மோகன்லால்.

சட்ட சபை உறுப்பினர்கள் கிடக்கட்டும் — நாட்டின் தலைவர் இராஜேந்திர பிரசாத் என்ன செய்கிறார்? சோமநாதர் ஆலய லிங்க பிரதிஷ்டையிலே கலந்து கொள்ளப் போகிறார்—நாட்டின் முதல்வர், அவர் நாட்டுக்குச்சொல்லும் செய்தி இது.

நாட்டின் உயிர் நாடி, பண்டித நேரு, 'ஹோலி' விழாவிலே கலந்து கொண்டு மஞ்சள் நீரைப் பொழிந்து விளையாடினர்—சிகப்புப் பொடி தூவி ஆடினர். காங்கிரஸ் சாதனையைக் கூறும் நேரு, இப்படி!

மற்ற மற்ற டில்லி மந்திரிகள், தினமொரு திருவிழாவில் கலந்து கொள்ளாமலிருப்பதில்லை.

சென்னை மந்திரிகளோ, தங்கள் கடமைகளைத் தவிர, மற்ற எல்லா வேலைகளையும் செய்கிறார்கள்!

மற்ற நாடுகளிலே, மந்திரிமார்கள், தங்கள் நேரத்தில் ஒவ்வொரு நிமிடத்தையும் பொன்னாகக் கருதிச் செலவிடுகிறார்கள் — நமது மந்திரிகளோ, ஊர் சுற்றுவதில் ஊற்சாகம் அதிகம் காட்டுகிறார்கள்!

அது மட்டுமா? கனம்கள், தங்கள் இலாகாவைச் சேராத வேலைகளில் தான் ஈடுபடுவார்கள். மராமத்து இலாகா மந்திரி, பள்ளிக்கூடம் திறந்துவைப்பார். உணவு மந்திரி, இந்தியின் அவசியம் பற்றிப் பேசுவார். கல்வி மந்திரி, மதுவிலக்குப் பற்றிச் சொற்பொழிவாற்றுவார். சட்ட மந்திரி, அரிஜன சேவையைப் பற்றி அலசுவார். முதல் மந்திரி சட்ட சபையில பேசமாட்டார்—வெளியில் சண்டப் பிரசண்டம் செய்வார்!

இத்தகையவர்கள் செய்யாத வேலையை, சட்ட சபை உறுப்பினர்களைச் செய்யச் சொல்கிறார், மோகன்லால். இவர்களாவது செய்யட்டுமே, என்ற எண்ணத்தில் சொல்லியிருக்கலாம்—ஆனால் அது முடியாதே!

ஏனெனில், சட்டசபை உறுப்பினர்கள் பலருக்குப் பேசத் தெரியாதே!—வாய்திறக்கத் தெரியாதவர்கள். கைதூக்கமட்டும் கற்றகனவான்கள்! இதை உணராமல் பேசுங்கள் என்கிறார் அவர்—

முடியாததை, முடிவிக்க முனைகிறார் மோகன்லால்.

வாய் திறவாதவரை, வாய்திறக்கச் சொல்கிறார்—அப்படியே வாய் திறப்பதானாலும் அவர்கள், காங்கிரஸ் சாதனைகள் என்று எவற்றைக் கூறுவர்?

ஏற்கனவே, தேர்தலுக்குமுன், அவர்களின் ஆட்கள் 'புளுகியவை' எதையும் நம்பாமல், கோயில் கட்டித் தருகிறேன், கும்பாபிஷேகம் செய்கிறேன், வெள்ளிரிஷபம் செய்து வைக்கிறேன், மாரியம்மன் செடில் உற்சவம் செய்கிறேன் என்று கூறி, பாமரரை ஏமாற்றி 'வோட்' பெற்ற சத்திய சந்தர்கள் அவர்கள்—இப்பொழுது மட்டும் எதைச் சொல்வார்கள்?

வயிறார உணவு தந்துவிட்டோம், 'அன்ன லட்சுமி வாழும் நாட்டில் அரிசிக்கு ரேஷனா' என்று பேசிய நாங்கள் இன்று ரேஷனை எடுத்துவிட்டு, உணவைக் குவித்து விட்டோம் என்று கூறுவரா? கும்பி நாற்றமடிக்கும் ரேஷன் அரிசி, பாரத மாதா அளித்த வரப்பிரசாதம் என்பரா? புளியங்கொட்டையும், பருத்திக்கொட்டையும் புசிக்கச் சொல்வது 'சத்திய சோதனை' என்று பேசுவரா?

இல்லை, தொழிலாளி மக்கள் துயர் துடைத்துவிட்டோம், நூல் தருகிறோம், நெசவாளிகளுக்கு—ஏற்ற வசதிகள் எல்லாம் தருகிறோம் உழுவர்களுக்கு—அதிக கூலி தருகிறோம், தொழிலாளிகளுக்கு என்று பிரசாரம் புரிவரா?

கல்லூரிகள் கட்டுகிறோம்—பள்ளிகள் அமைக்கிறோம் என்று பேச முடியுமா? கல்லூரி அமைப்புக்கு, பள்ளி எழுப்ப, நன்கொடை தந்தவர்கள், 'சும்மா'யிருப்பார்களா? பொதுமக்கள், 'பிச்சை'யெடுத்து கல்வி நிலையங்கள் அமைத்தால் திறப்புவிழாவிற்கு வருகிறார்களே, அந்தச் சிறப்பைப் பேசுவார்களா?

அணைக்கட்டுகள் கட்டுகிறோம், அநேகம் என்று அடுக்கிப்பேசுவரா?

வரிகளைக் குறைத்து விட்டோம் என்று, ஆண்டுக்கு ஆண்டு வளர்ந்து கோப்பை நிறைந்து வழியுமளவிற்கு, போய்விட்டதைத் தங்கள் வெற்றிக்குறிகுறியென்று காட்டுவரா?

இல்லாவிட்டால், எதற்கெடுத்தாலும், 'டெல்லி'க்குப் பறந்து சென்று, 'கைவிரிப்பு'டன் திரும்பி வருகின்றனரே, அதைச் சொல்வரா?

எந்தப் பெருமையை எடுத்துப் பேசுவர், சட்டசபை உறுப்பினர்கள்—காங்கிரஸ் கட்சியின் சாதனைகள் என்றால் எவற்றைக் குறிப்பிடுகிறார், மோகன்லால்?

* * *

பேசாத சட்டசபை உறுப்பினர்கள் பேசுகிறார்கள் என்றே வைத்துக்கொள்ளுங்கள். அவற்றைப் பொதுமக்கள் நம்புவார்களா? இது வரை நம்பியதே, தங்கள் மதியீனம் என்று உணர ஆரம்பிக்கும் இந்த காலில், சட்டசபை உறுப்பினர்கள் பேசினால், அதற்குச் செவி கொடுப்பார்களா?

அதுவும், சர்க்காரோடு சம்பந்தப்பட்ட சட்டசபை உறுப்பினர்கள், சர்க்கார் சாதனைகளைப்பற்றிப் பேசினால் ஏற்றுக்கொள்வரா? இல்லை, இவர்கள் இப்படித்தானே பேசுவர், பேசாவிட்டால் சம்பளம் கிடைக்குமா ......என்று கேலி பேசமாட்டார்களா? பிரச்சாரத்திலே ஆசையுள்ள மோகன்லால் இதனை மறந்துவிடுகிறாரே!

இந்தத் தொல்லைகளை எண்ணித்தான் நம் சட்டசபை உறுப்பினர்கள் அடக்கமே உருவாக இருக்கிறார்கள்போலும்! சிலர், ஆனால், பேசித் தீர்த்துவிடுவது என்ற முடிவுடன் மேடையேறினால், காங்கிரஸ்சாதனை என்று எதனைக் கூறுவது என்று புரியாமல், திட்டுகிறார்கள்! ஏதாவது பேசித் தொலைக்க வேண்டுமே, அடுத்த தேர்தலில் நாமும் நிற்க, இரண்டொரு கூட்டங்களில் பேசியிருக்கிறேன் என்று கூறிக்கொள்ளவாவது வேண்டுமே என்பதற்காக, நம்மைத் திட்டுகிறார்கள் — தூற்றுகிறார்கள்—குரல் எழுப்புகிறார்கள்—புகார் கிளப்புகிறார்கள்!

நமக்கொரு திருப்தி, 'பேசாத' திருவாயர், வாய் திறக்கவாவது, நம்மைப் பயன்படுத்திக்கொண்டார்களே, என்று! அவர்கள் பேசட்டும் நன்றாக—ஆனால், மோகன்லால் கூறியதுபோல, அவர்கள் ஆட்சிக்காலத்தில் செய்தவைகளை எடுத்துக் கூறுவதாக அவர்கள் பேச்சு அமையட்டும்!

இன்னும் சிலர் உண்டு அவர்கள் நார்மன் டாட்ஸ் பரம்பரை-அவர் இரவில், தலையணை தேடினர்—இவர்கள் பகலிலேயே உறங்குகின்றனர்.

நாமுண்டு, நம் சுவையுண்டு
நமக்குரிய நாற்காலியுண்டு
அதில், நாளும் தூங்குவோம்,
கண்டீர்.

இப்படித்தூக்கதேம்பாடி-அனந்த சயனம்' செய்து கொண்டிருக்கின்றனர். 'பள்ளிகொண்ட பெருமாள்களை எழுப்பி, பவனிவரச்செய்யப்பார்க்கிறார் மோகன்லால்.

முடியாதது, அந்த முயற்சி. அதில் வீணில் காலம் கழிக்கிறார்!

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

'வாய்த்த சமயம் நழுவ விடுவேனு' என்று கேட்பதுபோல வாரி வாரி வீசினார் ஆத்திரக் கனலை!"

"யார்? அவரா? கம்பீரா!"

"அது 'அடுத்த நாள் கதை' அப்பா! நான் சிலப்பதிகார மாநாட்டிலே ரா. பி. சேது அவர்கள் பேசியதைக் குறிப்பிடுகிறேன். என்ன வீரம்! என்ன ஆத்திரம்!!"

"அடுக்காதே, போதும். நீ எதைக் கூறுகிறாய் என்ன அவர் பேசினார்!

"நடப்பது சிலப்பதிகார மாநாடு, அவரோ தமிழ்ப் பேராசிரியர். அவர் என்ன பேசியிருக்கவேண்டும்? புகார்க் காண்டத்தின்பெருமை, மதுரைக் காண்டம் காட்டும் கொடுமை, வஞ்சிக் காண்டம்தரும் தமிழ்வீரம்-இதைத்தானே அவர் பேசுவார் என்று எதிர்பார்ப்பர்!"

"சகஜந்தான்"

"ஆனால், அவர் அதோடு நின்று விடவில்லை. இன்றைய அரசாங்கத்துக்கு எச்சரிக்கை தந்தாரப்பா! அதுவும், சாதாரணமான எச்சரிக்கை அல்ல; இதோ, கேளேன், அவர் பேசியதை!"

> "அரசியல் தவறினால் அரசு அழிந்துவிடும் என்ற உண்மை பல்லாண்டுகளுக்கு முன்பே இங்கு எடுத்து இடித்துக்கூறப் பட்டிருப்பதை அரசியல் வாதிகள் மறக்கவே கூடாது.
>
> குடியரசு நாடாகிவிட்ட நாம் சிலப்பதிகாரம் கற்பிக்கும் உண்மையை மறப்பது நமக்கு நாமே தீங்கு செய்து கொள்வது போன்றதே, மேலும்..."

"ஆகா! அப்புறம்........."

'சொல்கிறேன். ஒரு சந்தேகம், இப்போது நாம் சுதந்தரம் பெற்றுதானே விட்டோம்."

"ஆமாம்! அதிலென்னசந்தேகம்"

"சரி மேலே கேள். 'பிறநாட்டினருக்கு இனி அடிமையாக இருக்க மாட்டோம் என்ற துணிவு மாறுது குறையாது'—அவருடைய, பேச்சுத்தான். பிறநாட்டினிடமிருந்துதான் அடிமை விலங்கை அகற்றிக்கொண்டிருக்கிறோமே, இப்போது யார் பிறநாட்டினர்?"

'வீரா, பேசாமல் நீ கேட்டதைக் கூறு. கேள்விகள் போடாதே! அவர் எதையாவது சூசகமாகச் சொல்லியிருப்பார்!"

"சரி, கேள். இதைக்கேட்டபோது தான், 'பலே ஆசாமி!' என்று சொல்லத் தூண்டியது என்னை. தற்போதைய நாட்டுநிலைமையைமனதில்வைத்து அவர் பேசியிருப்பதைக் கேள்:

"குடிகள் அல்லல்பட்டு அழுதால் அவர்கள் விடும் கண்ணீர் அரசை அழித்துவிடும்"

"ஆகா! அப்புறம்?'

"தற்போதைய அரசியலார் யார்? காங்கிரஸ்காரர்தானே!"

"ஆமாம்—சொல்லு!"

"......அழித்துவிடும் என்பதை அரசியலார் மனதில் மறக்காமல் வைத்துக் கொள்ளவேண்டும்"

"சரியான சவுக்கடி, வீரா! நல்ல எச்சரிக்கை. தமிழ் கற்றவர் அல்லவா? அவர் யாருக்கு, எதற்கு, பயப்படவேண்டும்! சிலப்பதிகார மாநாடுஎன்றவிளம்பரத்துக்குக்கீழே 'சந்துமுனை சிந்துகடை'க்கூட்டமும் கூடுவதாக இருந்த விளம்பரத்தைக் கண்டு, வேறென்னவோ, என்று எண்ணினேன்! ஆனால் நீகூறுவதைக் கேட்கும்போது, ஆட்சியாளருக்கு மறைமுகமாக எச்சரிக்கை தரும் மாநாடு என்றன்றோ, தென்படுகிறது?"

'எப்படி வேண்டுமானாலும் வைத்துக்கொள், மாநாட்டைத் தாங்கி வைத்தவரும், தலைமை தாங்கியவரும் கையாண்ட 'சர்வா—சந்தர்ப்பம்—மயம்' என்ற பொன்னுரையை மட்டும் நான் மறக்கமாட்டேன்."

"தவக்கியவர்தான் இப்படிப் பேசினார். தலைமை வகித்தவர், என்ன சொன்னார்? தலைமைவகித்தது டாக்டர் வரதராசன் தானே?"

'ஆமாம்! அவரேதான். அவர் பேச்சின் ஆரம்பம் இது:-

"இம்மாநாடு சிலப்பதிகாரத்தை ஆராய்ந்து சீர்தூக்கும் கூட்டம் அன்று. (8000 பேர் வந்திருந்தார்களாம். நண்பா 8000 பேர்!) காவியத்தலைவியைப் போற்றுவதற்காகக் கூடிய கூட்டம் இது. நூலில் உள்ள புனைந்துரைகளை ஆய்ந்துரைப்பதற்கும் இங்கு இடம் இல்லை......சிலப்பதிகாரம், கற்பனைப் புனைந்துரை, குறைந்த அளவில் இடம் பெற்றுள்ள காவியம்"

"அப்படியென்றால்..."

"புரியவில்லையா! கண்ணகியின் கடுங்கோபத்தால் தீ மூண்டதே, தெரியுமல்லவா?"

"ஆமாம்! தீ மூண்டது"

"எப்படி?"

"இதென்னப்பா, கேள்வி! காளியின் மறுபிறப்புத்தானே கண்ணகி. காளிக்குக் கோபம் வந்தால், தீ மூட்டுவது ஒரு பெரிதா!"

"சே! நண்பா, நீயும் சராசரி மனிதனாகவே பேசுகிறாய் உன் கூற்றைக்கேட்டதும் எனக்குப்பாண்டியன் அவைக் களத்து வாயிற் காப்போன் நினைவுதான் வருகிறது. கண்ணகி—பாண்டியன் சபைக்குச் சென்று தன் வழக்குரைக்கப் போகிறாளல்லவா? அப்போது, அந்த வாயிற்காப்போன், கண்ணகியின் காய்சினக் கோலம் கண்டு அச்சத்தோடு ஓடி அரசன்பால், "கொற்றவையோ! பிடாரியோ, பத்திரகாளியோ, என்று கூறத்தரியனல்லன் — கணவனை இழந்த நங்கை' என்று சொல்கிறான். பார்த்தாயா, அவன் கூறும் திறத்தை, 'கணவனை இழந்த நங்கை!' அந்த வாயிலோனை விட உன் புத்தி......"

'வீரா! வெகுவாகத் தேறிவிட்டாய் சரி, எப்படி எரிந்தது, மதுரை?"

"தீராக் கோபர், ஆறாத ஆவேசம் துடித்து நிற்கிறாள் கண்ணகி! அவளது ஆத்திரம் அடங்கவில்லை! காதலனுக்குத் தீதிழைத்த மன்னனின் தலைநகரைப் பார்க்கிறாள்' அவளுக்கு அந்நகர்மீதுகூட ஆத்திரம் வருகிறது! 'அழியட்டும், அழியட்டும்' என்று கூவுகிறாள்!

'தன் இடமுலை கையாற்றிருகி,
மதுரை
வலமுறை மும்முறை
வாரா வலம் வந்து
மட்டார் மறுகின்
மணிமுலையை வட்டித்து
விட்டாள் எறிந்தாள்'

தீ மூண்டது, திக்கெட்டும் மூண்டது.

"என்ன நண்பா, வேடிக்கை காளியென்று கூறியதற்கும் சிலப்

கோபம் கொண்டாய். இப்போது, 'மூலை திருகி வீசினுள், மூண்டது தீ' என்கிறாயே"

"இதுபோலக் கேள்விகள் எல்லாம் வருமல்லவா? ஆகவேதான், ஒரே அடியாய் அடித்துப் பேசினார் வரதராசன்; 'கற்பனைப் புனைந்துரை குறைந்த அளவில் இடம் பெற்றது' என்று! புரிகிறதா?"

"பிறகு......"

"மூடநம்பிக்கை வயப்படுதல் ஆகாது என்பதை விளக்க அவர் தந்த உரைதான் 'கற்பனைப் புனைந்துரை'. அறிவொளி வீசுவது, தெரிகிறதா? அது மட்டுமல்ல, இன்றைய உலகில், வாழ ஒருவனும், வாட ஒருவனும் இருக்கும் நிலைபற்றிக்கூட, வேதனையோடு, சொன்னார்."

"இப்படியெல்லாமா, பேசினார்?"

"ஆமாம்! இதைத்தான் 'சர்வம்-சமயம்—மயம!' என்று சொன்னேன்! தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்புகளை ஏற்று நடத்த மனம் ஒப்பி, சென்று, அழைத்தோரின் விருப்பு வெறுப்புக்கஞ்சாது பகுத்தறிவு ஒளியை வீசியிருக்கின்றனர்-சாதாரண காரியமா அது, நண்பா. இந்தக் காட்சி பொய்யுரை புகன்று வாழும் எத்தருக்குத் தந்த சவுக்கடி! புனைக் காதைகளால், உண்மைகளை மண்ணுக்குள் புதைக்கும், புரோகித வாதத்துக்குத் தந்த சம்மட்டி அடி! பார்த்தாயோ—ஒரு பேராசிரியர் அரசியலாருக்கு எச்சரிக்கை விடுத்தார்! இன்னொரு பேராசிரியர் மூடமதிக்கு அறிவுரை தந்தார்!!"

"கேட்கும்போதே, மகிழ்கிறேன்—வீரா!"

"இருபது ஆண்டுகளாக நாம் ஆற்றும் பகுத்தறிவுப் பணியின் பரிசு, நண்பா, பரிசு! குறளும் சிலம்பும் கொண்டாடப்படும் முயற்சி-எப்படி வளர்ந்தது என்பதை எண்ணிப் பார்! இழந்ததை மீண்டும் பெறும் எண்ணம் உதயமானது எப்படி?— நினைத்துப் பார். இதயம் குளிரும்! எண்ணமெல்லாம் தமிழ் மணக்கும்! வாழட்டும் நம்மவர்! வளரட்டும் தமிழ் மொழி!!"

"தேனைச் சுவைப்பது, சிந்து பேசிடும் சிற்றாறு காண்பது, தென்றலில் குளிப்பது, — இத்தனையும் சேர்ந்ததன்றோ, தமிழ்க் காவியம், கற்பது!"

"ஆம், நண்பா! தமிழ்—நம் பெருமைச் சின்னம். திருவிடமெங்கும் உலவிய காலம் ஒன்றிருந்தது தமிழுக்கு. ஆனால் 'களி தெலுங்கும் கவின் மலையாளமும், துளுவும் உன் உதிரத் துதித்தெழுந்தே...' என்று பாடுமளவுக்கு, மூன்று மொழிகளின் முதுபெருந் தாய் ஆயிற்று! இது பற்றிக்கூட பேராசிரியர் சேது பேசும்போது, "சேர நாடும் தமிழ் நாடே. தமிழ் வேறு மலையாளம் வேறு என்று 'பறையும்' மலையாளிகளுக்கு சிலப்பதிகாரத்தைக் காட்டலாம். சேரன் செங்குட்டுவன் தமிழன் என மார்தட்டிக் கூறுகிறேன் என்று குறிப்பிட்டார்."

"ஆம்! சேரன் செங்குட்டுவன், தமிழ்ச் சேய் தான். கேரள நாட்டின் வீரம் பேசும் அவனது கதையைத் தமிழ்தான் கூறுகிறது. அது மட்டுமல்ல தமிழரைத் தாழ்த்திப் பேசிய வடவாரிய மன்னராம் கனக விசயரைப் புறமுதுகிட்டோடச் செய்து, அவர் தம் தலையில் இமயத்தின் கல்லேற்றி, கங்கையில் ஆட்டுவித்து, கண்ணகியின் உருவம் சமைத்த, வெற்றிச் செல்வன், வீரன், குட்டுவன்! தமிழ்க்கொடியை இமயத்தில் நாட்டிய எழிற்மிகுச் சேரன், அவன்!"

"இந்த நிகழ்ச்சியை நாடகமாகவும் கூட நடத்தப்படுகிறதல்லவா, 'இமயத்தில் நாம்' என்ற பெயரால்!"



★

16-12-50 அன்று குறிஞ்சிப்பாடியில் திருமணம் செய்துகொண்ட சாவித்திரி — டி. வி. சாமி தம்பதிகள். தோழர் [illegible] வி. சாமி, பல்லாண்டுகளாக ரங்கூனில் தொழில் புரிந்து வருபவர். நமது இயக்கத் தோழர் 9 மாதங்கள் தாயகத்திலிருந்து, இப்பொழுது மீண்டும் ரங்கூனுக்குத் திரும்பிவிட்டார்.

★

"ஆம்! வீரா, 'கண்ணகிப் பந்தலில்' இரு நாட்கள் தங்கள் கலையைக் காட்டிய டி. கே. சண்முகம் சகோதரர்களால் நடிக்கப்பட்டு வருகிறது."

"அவர்களாலா?"

"ஆம், அதிலென்ன வியப்பு"

"பின், ஏன், சிலம்பு மாநாடன்று வேறு ஒரு நாடகம் போட்டனர்"

"........."

"நடந்தது சிலப்பதிகார மாநாடு. நடைபெறும், இடம் கண்ணகிப் பந்தல். சிலப்பதிகாரத்தின் வஞ்சிக் காண்டம் தரும் சித்திரம் 'இமயத்தில் நாம்'—இருந்தும், ஏன் வேறு நாடகம் நடத்தினர். "இமயத்தில் நாம்" — பொருத்தமற்றதென்பதாலோ?"

"என்னவோ, அவர்கள் போக்கு யாருக்குத் தெரியும்!"

"நீ ஒரு பைத்யம். உனக்குத் தெரியாது—அதனால் ஊராருக்குப் புரியாது போய்விடும் என்றெண்ணுதே. ஏன், தெரியுமா?"

"என்னவாம்?"

"'இமயத்தில் நாம்'—எதைக் கூறுகிறது."

கனகவிஜயன் — என்ற ஆரிய மன்னர், தமிழரைப் பழித்தனர். அது கேட்ட சேரன் சிங்கம்போல எழுந்தான்! இமயம் நோக்கி, வெற்றிச் சிந்து, பாடிப் புறப்பட்டான். தமிழ்ப்படை கண்ட ஆரிய அரசர்கள் பயந்து ஓடினர். இமயத்தில் நம் புகழ் நாட்டப்பெற்றது —கனகவிசயன், எனும் கசடர்கள் கல் சுமந்தனர்! ஆரிய அகம்பாவம் வீழ்ந்தது—தமிழ்வீரம் வென்றது — இதைத்தான 'இமயத்தில் நாம்' கூறுகிறது"

"அழுத்தமாகச் சொல். அதனால் தான், சிலப்பதிகார மாநாட்டில் 'இமயத்தில் நாம்' இல்லை"

"அந்த நாடகம் கூடாது என்று கருத்தா அல்லது தகாது என்பதா?"

"இரண்டுமிருக்கலாம். ஏனெனில் தமிழனின் அன்றைய வீரத்தையல்லவா சித்தரிக்கிறது, அந்த ஓவியம். அதைக் காட்டினால், கேலிச் சிரிப்பு எழும்புமல்லவா? "இமயத்தில் நாம்" தமிழகப் பெருமையைக் காட்டுகிறது. நமது வீரத்தைக் கூறுகிறது. தமிழரின்மாட்சி, நாகரீகச் சிறப்பு, நல்லாட்சிப்பெருமை — எல்லாவற்றையும் காட்டுகிறது. அதை நடித்துக்காட்டினால், மக்கள் கேட்காமலா இருப்பர்! மாநாடு நடத்தியோரைக் கேட்காவிட்டாலும் பேசிச்செல்லாமலா இருப்பர், கூடிக்கலையும்போது. அப்படியெல்லாம் வாழ்ந்தோமாம். நமது மூதாதை, இமயத்தில் கொடி நாட்டினராம், அந்த நாளில். இப்போது? இப்போது? என்று,பேசத்தானே செய்வர்!"

"ஆமாம்! ஆமாம்!"

"அந்த 'இப்போது' — என்ற கேள்வி எழும்பினால் பலன் எங்கு போய்ச்சேரும். புரிகிறதா?"

"டில்லிக்கு நாம் அடிமையா,புகழ் பரப்பிய தமிழினம் புண்படுவதா இமயத்தாரால், வாளும் வேலும் கொண்டு ஆண்ட பரம்பரை, தாராசுக்கும் தர்ப்பைக்கும் தலை குனிவதா—என்றெல்லாம்......"

"கருத்தலை மோதத்தான் செய்யும்"

"அதனால்தான், அங்கே 'இமயத்தில் நாம்' இல்லை!"

"சிலம்பைப் போற்றினர். அதன் ஒளியை மறைத்தனர்-என்கிறயே!"

"அங்குதான் நண்பா, இருக்கிறது, விஷயம்!"

"எதாயிருந்தாலென்ன? புண்ணைப் புனுகுப்பூச்சால் மறைக்கவா முடியும? சூரியனை மறைத்திட கார் மேகங்களாலா இயலும்! எல்லாம், காற்றுக்கோழி—கதைதான்! சுருங்கச்சொல்லட்டுமா? சர்வம் சந்தர்ப்பமயம்!"

"அப்படியா......"

"திகைக்காதே! இரை காணாத பருந்து, சாகசம் பாய்ச்ச இடமில்லாத நரி, சந்து கிடைக்காத ஆந்தை சும்மாயிராதல்லவா? அதுபோலத்தான்! ஆனாலும், நமக்கென்ன! மொத்தத்தில் சிலம்பு ஒலித்தது!!"

"அதுவரையில், லாபந்தான். வேதாகமங்களையும், விசித்திர சித்துக்களையும்பற்றிப்பாடாது,கூடாது சிலம்பையாவது ஒலிக்க நினைத்தார்களே-அதுவரையில், அவர்கள்..."

'நல்லவர்கள் தான், நண்பா. எது செய்கிறோம், எதற்குச் செய்கிறோம் என்று உணராவிட்டாலும் ஏதோ, ஒலித்தது சிலம்பு!"

"அதுவரை, மகிழ்ச்சிதான். வாழட்டும் அவர்கள்! வாழ, வழி பெறட்டும் அவர்கள்!!"

காஞ்சி கலைவிழா

★

காஞ்சி பச்சையப்பன் கல்லூரி அமைப்பு நிதிக்காக,15-3-51 முதல் 21-3-51 வரை முறையே ஏழு நாட்கள் கலைவிழா நடந்தேறியது.

கலை விழாக் குழுவினர், திறந்த வெளி அரங்கில், குறைந்த கட்டணத்தில் மேற்படி கலைவிழாவுக்கான ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தனர்.

15-3-51 இரவு திரு. கே. ஆர். ராமசாமி குழுவினரின் 'ஓர் இரவு' நாடகத்தோடு, கலைவிழா துவங்கிற்று. மேற்படி விழாவை சென்னை மாநிலப் பொதுப்பணி அமைச்சர் பக்தவத்சலம் துவக்கிவைத்தார். கலைவிழாவின் நோக்கம் குறித்து, சி. என். ஏ. விளக்கினர்.

16-3-51 இரவு, மேற்படி குழுவினரால் 'துளிவிஷம்' நாடகம் நடைபெற்றது.

17-3-51 இரவு திரு. டி. கே. சண்முகம் அவர்தம் குழுவினரின் 'அந்தமான் கைதி' நாடகம், சென்னை மாநில அமைச்சர் ஏ. பி. ஷெட்டி தலைமையில், சிறப்புற நடைபெற்றது.

18-3-51 இரவு, மேற்படி குழுவினரின் 'ஔவையார்' நாடகம் கண்டு களித்தனர், காஞ்சி மக்கள். சென்னை மாநில மதுவிலக்கு அமைச்சர் சஞ்சீவி ரெட்டி அன்று தலைமை தாங்கினர்.

19-3-51 அன்று, மேற்படி குழுவினரின் 'மனிதன்' நாடகம் நடைபெற்றது. காஞ்சி நகராண்மைக் கழகத் தலைவர் டாக்டர் சீனுவாசன் எம். எல். சி. தலைமை வகித்தார். சி.என்.ஏ. டி.கே. எஸ். சகோதரர்கள் பணிகளையும் கலைபார்வத்தையும் பாராட்டிப் பேசினர்.

20—3—51 இரவு "வேலைக்காரி" நாடகம் திரு. கே. ஆர். ராமசாமி குழுவினரால்நடைபெற்றது. அதில், பிரபல நடிக நட்சத்திரங்களான டி. எஸ். பாலையா (மணி), டி. பால

சுப்பிரமணியம் (வேதசால முதலியார்), யதார்த்தம் பொன்னுசாமி (முருகேசநாயக்கர்), கே. எஸ். அங்கமுத்து முதலானோர் பொறுப்பேற்று நடித்து, மகிழ்வித்தனர்.

21—3-51 கடைசி நாளன்று கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் குழுவினரின் 'இழந்த காதல்' நாடகம் சென்னை மாநில நிதி அமைச்சர் கோபால ரெட்டி தலைமையில் நடைபெற்றது. தோழியர் டி. ஏ. மதுரமும் பாத்திரமேற்று நடித்தார். திரு. புளிமூட்டை, சகஸ்ரநாமம், துரைபாண்டியன், ராதாகிருஷ்ணன் ஆகியோரும் பொறுப்பு தாங்கி கலந்துகொண்டனர். நிதி அமைச்சர், கலைவிழாப் பணியையும், பச்சையப்பன் கல்லூரி அமைப்புக்கான ஒத்துழைப்பு தேவை என்பது குறித்தும், தெலுங்கில் பேசினார். அதை, திரு. சொக்கலிங்கனார் தமிழில் மொழி பெயர்த்தார்.

பிறகு, கலை விழாச் செயலாளர் என்ற முறையில், யாவருக்கும் நன்றி கூறிவித்து "இவ்விழாவின் மூலம் கிடைத்துள்ள தொகை சுமார் 41,000 ரூபாய்களையும் பச்சையப்பன் கல்லூரி நிதிக்குச் சேர்ப்பிக்கிறேன்" என்று அறிவித்தார், சி. என். ஏ.

பிறகு சென்னை பச்சையப்பன் அறநிலையத் தலைவர் திரு சடகோபன், கலைவிழா முயற்சியையும் அதில் பங்கேற்றோர் சிறப்பையும், பாராட்டிப் பேசினார்.

கலைவிழாவில், பங்கேற்ற கலைவாணருக்கும் ஏனையோருக்கும் தமது சார்பில் சி. என். ஏ. நன்றி தெரிவித்துக் கொண்டார்.

ஏழு நாட்களும், தங்களுக்குக் கிடைத்த இனிய வாய்ப்பை, காஞ்சி மக்கள் பேருவகையோடு பயன்படுத்திக் கொண்டனர்.

இந்த விழா முயற்சியில் ஒத்துழைத்த கலைவிழாக் கமிட்டியாரின் சேவையும், குறிப்பாக செயலாளர்களில் ஒருவரான திரு. வி. புட்டாசாமியின் பணியும் மிக மிகப் பாராட்டற்குரியது.

X

★ நார்மன் டாட்ஸ்கள் ★

தூக்கமோ, அவரைத் 'தூக்கிக்' கொண்டுபோய்விடும் போலிருந்தது. அவர் தன்னைச் சுற்றிலுமுள்ளோரை உற்றுப்பார்த்தார். பலரும் 'கொட்டைவிழி' விழித்தபடியிருந்தனர்.

அவரது நிலையிலுள்ளவரும் அங்கு இல்லாமல் போய்விடவில்லை.

முதலில் அவர், தன் சூட்கேஸைத் தலையணையாக உபயோகித்துத் தூங்கிப் பார்த்தார்—முடியவில்லை!

யோசித்தார் தீர்க்கமாக — ஒரு தீவிரமாக — ஒரு தீவிரமான முடிவுக்கு வந்தார்.

கையிலே ஒரு தலையணை எடுத்துக்கொண்டு சென்றார் — அதுமட்டுமா? சுயக்ஷவர சாமான்கள், கம்பளிப்போர்வை, ஒரு முழு கம்பளி பனியன் ஆகியவையுடன்!

அவர் சென்ற இடம் — பார்லிமெண்ட் மண்டபம் — அவரோ, பார்லிமெண்ட் மெம்பர்!

இப்பொழுதெல்லாம், பிரிட்டிஷ் பார்லிமெண்ட் கூட்டங்கள் இரவிலும் நடப்பதால் சிலர் தூக்கத்தால் தொல்லைப்படுகிறார்களாம்.

அதிலே ஒருவர் டார்ட்போர்ட் தொகுதியின் பிரதிநிதி நார்மன் டாட்ஸ் — அவர்தான் பாராள, 'பாயும் தலையணையும்' தேடினார்.

அவர் அவ்விதம் தலையணையுடன் வந்தது குறித்து ஒழுங்குப் பிரச்சினை எழும்பட்டும் — எழும்பாமல் போகட்டும்-நமக்கொரு சுவையான சித்திரம் இது.

நார்மன்டாட்ஸ், தூங்க, தலையணை தேடினார், பார்லிமெண்ட் மண்டபத்தில் — அவரும், நாட்டின் சுக, துக்கங்களைப்பற்றி விவாதித்து முடிவு செய்யும் அந்த அவையின் உறுப்பினர்தான்!

தூங்குகிறார்— தலையணைவைத்து சுகமாக — அவரோ பார்லிமெண்ட் ஏகாம்பரம்!

இது இங்கிலாந்தில் — இந்தியாவில் அத்தகைய 'நார்மன் டாட்ஸ்' இல்லையா என்று கேட்கத் தேவையில்லை — சென்னை சட்டசபை, இதற்கு உடனே விடை சொல்லும்.

நார்மன்டாட்ஸ் இரவில் தூங்கினார்—பகலிலேயே அந்தப் பாதையில் நடப்பவர் இங்குண்டு.

இங்கு, சட்டசபை உறுப்பினர்கள் தூங்குவது சரியா, தவறா என்பதைப்பற்றி விவாதம் செய்து கண்ட வீரபாரத புருஷர்களல்லவா கூடியிருக்கிறார்கள்! இங்கிலாந்து பார்லிமெண்டைத் தூக்கிச் சாப்பிட்டு ஏப்பம்விடக்கூடிய வல்லவர்கள் இங்கே இருப்பதால், இந்த 'கும்பகர்ண ஆராய்ச்சி' ஏற்கனவே நடந்துவிட்டது!

தூங்கலாம் — ஆனால், குறட்டைவிடக்கூடாது!-- சரியானமுடிவுக்கு வந்துவிட்டார்கள். அதற்குக் காரணங்காட்டாமலிருந்துவிடவில்லை. இது உஷ்ணப் பிரதேசம். ஆகவே தூக்கம் வருவது இயற்கை எனவே, அதனைத் தடுப்பது தவறு, பாவம்! குறட்டை விடாமலிருந்தால்மட்டும் போதும். எப்படி, சட்டசபை ஆராய்ச்சி. இது சென்னையில்!

இங்கேயும், நார்மன் டாட்ஸ்கள் ஏராளம்! ஆனால், அவர்கள் நார்மன் போன அளவு தலையணை தேடவில்லை. அதற்குக்காரணம் வேறு. நார்மனுக்குத் தலையணையின்றி தூங்க முடியவில்லை. நம் சட்டசபை உறுப்பினர்கள், தூங்குவதில் பலே பேர்வழிகளல்லவா, உட்கார்ந்தபடி தூங்குவர், நின்றபடியே உறங்குவர் — நடந்தபடியே உறக்கம்கொள்ளும் உத்தமர்களல்லவா?

* * *

நம் சட்டசபை உறுப்பினர்களைப் பற்றி அறிந்தும், அறியாதவர்போல பேசிவிட்டார், காங்கிரஸ் காரியதரிசி மோகன்லால் கௌதம்.

காங்கிரஸ் கட்சிக்கு அவர் செயலாளராக இருக்க தகுதியே இல்லை! —ஆம், தம் கட்சி உறுப்பினர்களின் தகுதி, திறமையைக்கூட அறிந்து

(7-ம் பக்கம் பார்க்க)

Edited Printed & Published by C N. Annadurai M. A at DravidaNadu" Press
95, Tirukkachinambi Street Kancheepuram.